Registered as a News Paper
பக்கங்கள்: 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 08 | (22-01-1992) | புதன்கிழமை | ஓசை: 338

## க.பொ.த. (உ.த) பரீட்சை; மாணவர் தகுதி அறிவிப்பு

1993ஆம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடைய பாடசாலை மாணவர்கள் பற்றிய விபரத்தை யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் சகல க. பொ. த. (உ. த) வகுப்புகளைக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளார். 1990 டிசம்பர் க. பொ. த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றியவர்கள் மட்டுமே 1993க.பொ.த. (உ.த)பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். 1991 டிசம்பர் க. பொ. த. (சா.த) பரீட்சைக்குமுதன் முறை தோற்றியோர் 1994 க.பொ.த.(உ.த) பரீட்சைக்குமுதன்முறையாகத் தோற்றலாம். 1993 க.பொ.த (உ. த)பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பாடசாலை மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் அவ்வகுப்பில்குறைந் (4ஆம்பக்கம் பார்க்க)

### சீனன்குடாவில் பாரிய குண்டுவெடிப்பு

# திருமலை விமான தளம் தகர்ந்தது

# 40 படையினர் பலி: 60 பேர் காயம்

## சிங்கள அரசுக்கு பேரதிர்ச்சி

(திருக்கோணமலை)

நேற்றுக்காலை திருக்கோணமலை சீனன்குடாவில் நிகழ்ந்த பாரிய குண்டுவெடிப்பு சம்பவத்தில் சிறிலங்கா விமானப் படைத் தளம் பெரும் அழிவுக்கு உள்ளாகியது. இந்தக் குண்டு வெடிப்பில் ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறி விமானத்தள கட்டடங்களை தரைமட்டமாக்கியது. தளத்தின் ஓடுபாதையில் தரித்துநின்ற பல போர் விமானங்கள் சேதமடைந்தன.

இப்பெரும் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 40 விமானப்படையினர் கொல்லப்பட்டதாகவும் 60பேர் வரை படுகாயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் அறிவிக்கின்றன. இந்தக் குண்டுவெடிப்பு சம்பவம் சிறிலங்கா அரசியல் இராணுவ வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## போர் விமானங்கள் சேதம்

சீனன்குடா குண்டு வெடிப்பினால் விமானங்களும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. விமானம் தங்கும் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு வீச்சு விமானங்களும், விமான ஓடுபாதையில் தயார் நிலையில் நின்ற விமானங்களுமே சேதத்துக்குள்ளாகியதாக திருக்கோணமலையில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆயுத களஞ்சியம் சிதறியது

## மீனவர் மீது சூடு

மீனவர்கள் சென்ற வள்ளத்தை நோக்கி பூவரசந்தீவுப் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் சுட்டனர்.

இச்சம்பவம் நேற்று (21-1-92) அதிகாலை குடாக் கடல்பகுதியில் நடைபெற்றது.

வள்ளத்தில் சென்ற மீனவர்கள் கடலில் பாய்ந்ததனால் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது.

பூநகரிப் பகுதியில் தனித்தீவாக அமைந்துள்ள மேற்படி தீவில் இராணுவத்தினர் தங்கக்கூடிய வசதிகள் இல்லையென்றும் வந்து செல்லும் சமயங்களிலேயே மேற்படி தீவில் நின்று இராணுவத்தினர் கடற்தொழிலாளர்களை நோக்கி தாக்குதல் நடத்தி வருவதாகவும் தெரியவருகிறது. (21)

## வடமராட்சியில் அகோர குண்டு வீச்சு; இருவர் பலி; இருவர் படுகாயம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறையிலும், குடத்தனை மணற்காட்டிலும் நேற்றுக் காலை ஸ்ரீலங்கா குண்டு வீச்சு விமானங்களின் குண்டு வீச்சுக்களால் பருத்தித்துறை தபால் நிலைய ஊழியரான ஐந்துபிள்ளைகளின் தந்தையொருவரும், பெண்மணியொருவரும் பலியாகினர். இருவர் காயமடைந்தனர். சுமார் 15 வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை சுமார் 10 மணியளவில் வடமராட்சிப் பகுதிக்கு வந்த மூன்று பொம்மர் விமானங்கள், ஹெலிகாப்டர் ஒன்றும் பல தடவைகள் வட்டமிட்டு இக்குண்டுமாரிகளைப் பொழிந்தன. பருத்தித்துறையில் ஐந்து குண்டுகளும், குடத்தனை மணற்காட்டில் இரண்டு குண்டுகளையும் குண்டுவீச்சு விமானங்கள் வீசின.

பருத்தித்துறையில் 4 ஆம் குறுக்குத்தெரு அந்தோனியார் ஆலயத்திற்குச் சற்றுத்தூரத்தில் சந்தியில் வீசிய குண்டுகளால் பருத்தித்துறை தபால் நிலைய தபால் சேவகர் சுப்பிரமணியம் தெட்சணாமூர்த்தி (வயது 57 பெரியதம்பிரான்கோவிலடி கலட்டி) ஸ்தலத்திலேயே பலியானார். இவர் தம்பசிட்டிப் பகுதிக்கு தபால் கொடுத்து விட்டு தபால் நிலையத்திற்குச் சென்று கொண்டிருக்கும் போது குண்டு வீச்சு விமானங்களைக் கண்டு ஓடியபோதே குண்டுக்குப் பலியாகினார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இரு இடங்களில் விமானக் குண்டு வீச்சு

## இராணுவத் தாக்குதலுக்கு நான்கு தமிழர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் நான்கு தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை எட்டரை மணியளவில் காஞ்சிரங்காடு என்னும் இடத்தில் வைத்து இராணுவத்தினர் பொது மக்களைத் தாக்கினர் இத்தாக்குதலில் சாமியார் ( 4ஆம் பக்கம் பார்க்க)

## லொறியை விடுவிக்க பூநகரி இராணுவம் மறுப்பு

(நமதுநிருபர்)

கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கிய போதும் பூநகரி இராணுவ அதிகாரி லொறியை வழங்க சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தையும் அரசாங்க அதிபரையும் அதன் உரிமையாளர்கள் கேட்டுக் கொண்டமையும் தெரிந்ததே.

கொல்லப்பட்டதாகவும் 60பேர் வரை படுகாயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் அறிவிக்கின்றன. இந்தக் குண்டுவெடிப்பு சம்பவம் சிறிலங்கா அரசியல் இராணுவ வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# போர் விமானங்கள் சேதம்

சீனன்குடா குண்டு வெடிப்பினால் விமானங்களும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. விமானம் தங்கும் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு வீச்சு விமானங்களும், விமான ஓடுபாதையில் தயார் நிலையில் நின்ற விமானங்களுமே சேதத்துக்குள்ளாகியதாக திருக்கோணமலையில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஆயுத களஞ்சியம் சிதறியது

சீனன்குடாவிமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட பாரிய குண்டு வெடிப்பினால் அங்கிருந்த ஆயுதக் களஞ்சியமும் வெடித்துச் சிதறியதாக பி.பி.ஸி. தெரிவித்தது. முதலில் வெடித்த குண்டுஆயுதக் கிடங்கிற்கு அண்மையில் வெடித்ததாகவும், இதைத் தொடர்ந்து ஆயுதக்கிடங்கு வெடித்துச் சிதறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கட்டடங்கள் தரைமட்டம் இடிபாட்டிற்குள் சடலங்கள

(திருமலை)

திருமலை சீனன்குடா விமானப் படைத்தளத்தில் ஏற்பட்ட சக்திவாய்ந்த குண்டு வெடிப்பினால், விமானத் தளத்திலிருந்த பலகட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. கட்டடத்தினுள் விமானப் படையைச் சேர்ந்த பலர் சிக்கி மரணமடைந்தனர்.

இவ் இடிபாட்டிற்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளதாக ரூபவாகினி நேற்று மாலை தெரிவித்தது

## புலிகள் மீது சந்தேகம்; தேடுதல் வேட்டை தீவிரம்

(திருமலை)

சீனன் குடா விமானப்படை குண்டுவெடிப்புச் சம்பவம் தவறுதலாக நடந்த ஒரு சம்பவம் என்று சிறிலங்கா அரசு தரப்பில் சொல்லப்படுகிறது. இதே வேளை இந்த குண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா சிறைகளில் 100 பேர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

சிறிலங்கா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள்தொடர்ந்தும்உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தி வருகின்றனர். ஏறத்தாழ நூறு இளைஞர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டும், எந்த நீதி விசாரணையுமின்றி சுமார் மூன்றாண்டிற்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், எந்த வசதியுமற்ற தடுப்பு முகாம்களில் ஆடு, மாடுகளைப் போல அடைத்து வைத்திருப்பதாகவும் இவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். சுமார் பதின்நான்கு சிறைக்கோட்ட முகாம்களில் ஏறத்தாழ நாலாயிரத்து ஐந்நூறு பேர்வரையில் தடுத்து வைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாவியில் படகு கவிழ்ந்து உ.அ.அதிபர்உட்பட5பேர்பலி

(மண்டூர்)

மட்டக்களப்பு வாவியின் மண்முனைத் துறையில் கடந்த சனியன்றுஇடம்பெற்ற படகு விபத்தில் பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபர் எஸ். ஜெயதாசன் உட்பட ஐந்து பேர் உயிர் இழந்துள்ளனர்.

சம்பவம் நடந்ததினம் உதவி அரசாங்க அதிபர் கடமை முடிந்து மட்டக்களப்பு வருவதற்காக மண்முனைத் துறையை தோணியில்கடக்கும் போதே கொந்தளிப்பினால் தோணி கவிழ்ந்துஇந்தவிபத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

வீச்சு விமானங்களின் குண்டு வீச்சுக்களால் பருத்தித்துறை தபால் நிலைய ஊழியரான ஐந்துபிள்ளைகளின் தந்தையொருவரும், பெண்மணியொருவரும் பலியாகினர். இருவர் காயமடைந்தனர். சுமார் 15 வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை சுமார் 10 மணியளவில் வடமராட்சிப் பகுதிக்கு வந்த மூன்று பொம்மர் விமானங்கள், ஹெலிகாப்டர் ஒன்றும் பல தடவைகள் குண்டுவீச்சு விமானங்கள் வீசின.

பருத்தித்துறையில் 4 ஆம் குறுக்குத்தெரு அந்தோனியார் ஆலயத்திற்குச் சற்றுத்தூரத்தில் சந்தியில் வீசிய குண்டுகளால் பருத்தித்துறை தபால் நிலைய தபால் சேவகர் சுப்பிரமணியம் தெட்சணாமூர்த்தி (வயது 57 பெரியதம்பிரான்கோவிலடி கலட்டி) ஸ்தலத்திலேயே பலியானார். இவர் தம்பசிட்டிப் பகுதிக்கு தபால் கொடுத்து விட்டு

## மன்னாரில் இரு இடங்களில் விமானக் குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பதினெபராம் கட்டை மற்றும் முருங்கன் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான அவ்ரோ விமானங்கள் நேற்று குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. நேற்றுக் காலை ஏழுமுப்பது மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலினால் பொது மக்களின் உடமைகள் பலத்த சேதமடைந்துள்ளன.

## இராணுவத் தாக்குதலுக்கு நான்கு தமிழர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் நான்கு தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை எட்டரை மணியளவில் காஞ்சிரங்காடு என்னும் இடத்தில் வைத்து இராணுவத்தினர் பொது மக்களைத் தாக்கினர் இத்தாக்குதலில் சாமியார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## லொறியை விடுவிக்க பூநகரி இராணுவம் மறுப்பு

(நமதுநிருபர்)

கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கிய போதும் பூநகரி இராணுவ அதிகாரி லொறியை வழங்க மறுத்துள்ளார்.

கடந்த பலமாதங்களாக பூநகரி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் பிடிக்குள் தொண்ணூறுக்கும் மேற்பட்ட வாகனங்கள் சிக்கியுள்ளமையும் அதனை மீட்டுத்தருமாறு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தையும் அரசாங்க அதிபரையும் அதன் உரிமையாளர்கள் கேட்டுக் கொண்டமையும் தெரிந்ததே.

கடந்த வாரம் 'விமாகி' நிறுவனத்திற்குச் சொந்தமான லொறியை பூநகரியிலிருந்து எடுக்க கொழும்பிலுள்ள கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் துணிகர அதிரடி: 20 ராணுவம் பலி: பலர் காயம்

## குச்சவெளியில் பலத்த மோதல்

(திருக்கோணமலை)

திருமலைகுச்சவெளிப் பகுதியில்நேற்றுவிடுதலைப் புலிகள் நடாத்திய துணிகரத்அதிரடி தாக்குதல் ஒன்றில் இருபதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பெருமளவு நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இம்மோதலின் போது முகாமிலிருந்து துணைக்கு வந்த இராணுவத்தினரையும்புலிகள் வழி மடக்கித் தாக்கினர்.

நேற்றுக்காலை 8.35 மணியளவில் சலப்பை ஆறு இராணுவ முகாமிலிருந்து குச்சவெளி இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது இரணைக்கேணி என்னும் இடத்தில் வைத்தே விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்துத் தாக்குதலை நடாத்தினர். ரோந்து வந்த இராணுவ அணியில் சுமார் 40 பேர் இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சண்டை ஏறத்தாழ 30 நிமிடங்கள் இடம் பெற்றது. இதில் 20 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை தாக்குதலுக்குள்ளான அணியினருக்கு உதவிவழங்கும்நோக்கத்துடன் குச்சவெளி முகாமிலிருந்து இரண்டு ட்ரக்குகளிலும், இரண்டு ஜீப்புகளிலும் வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகள்வசம் சிக்கியது

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள இரணைக்கேணி என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் பெருமளவு நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின்விபரம்வருமாறு.

★ ஜி. பி. எம். ஜி. -01

★ ஏ. கே. எல்.எம். ஜி.-1

★ ரி-56 பட்மொடல் துப்பாக்கி -05

★ ரி-56-1 ரகத்துப்பாக்கி -05

★ ரி-56-2 ரகத்துப்பாக்கி-03

★ ரி-81 ரகத் துப்பாக்கி -05

★ ஏ. கே. எல். எம். ஜி. ரம் ரவைக்கூடுகள் -05

★ ரி-56ரக ரவைக்கூடுகள் -52

★ ரி-81 ரகரவைக்கூடுகள் -17

★ ஜி. பி. எம். ஜி. ரவைத் தொடர்கள்-487

★ ஏ. கே.எல்.எம்.ஜி. ரவைத் தொடர்கள்-445

★ 7.62 ரக நடுத்தர ரவைகள்-2645

★ நேட்டோ ரகரவைகள்-293

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குச்சவெளி சண்டையில் 3 புலிகள் வீரச்சாவு

திருக்கோணமலை மாவட்டம் குச்சவெளிப் பகுதியில் நேற்று நடந்த மோதலின் போது—

★ மேஜர் குகதாஸ் (சிவானந்தம் முருகையா, திருக்கோணமலை)

★ கப்டன் ஜெயன் (நாராயணன் தங்கராசா பன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளவும்

(நமது நிருபர்)

பொதுமக்களினால் வீதிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் பல ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன, உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளின் விபரங்கள் வருமாறு:-

நா. அரியரத்தினம் (சங்கானை) சி. நவரத்தின பூபதி (தெல்லிப்பளை) த. வசந்தகுமார் (உடுப்பிட்டி) ந. சின்னக்குட்டி (யாழ்ப்பாணம்) க. சாந்தலிங்கம் (கோப்பாய்) வ. சுப்பிரமணியம் (இணுவில்) அ. ஆனந்தக்குமார் (வட்டுக்கோட்டை) சி. மீனாம்பிகை (பளை) இ. பேரம்பலம் (சங்கரத்தை) இ. ராஜேஸ்வரி (உரும்பராய்) கு. யோகராஜா (கோண்டாவில்) பொ. கூடடச்சாமி (தாவடி) சி. கணபதிப்பிள்ளை (கரணவாய்) அ. பற்குணன் (கொட்டாஞ்சேனை கொழும்பு) க. சின்னப்பொடியன் (கைதடி) க. புஷ்பலதா (கல்லடி) கி. கிருபா (கரணவாய் தெற்கு) க. சந்திரகலா (கீரிமலை) இ. சுப்பிரமணியம் (திருக்கோணமலை) மு. கார்த்திகேசன் (பருத்தித்துறை) செ. சிதம்பரநாதன் (அளவெட்டி) சி. பரமசிவம் (சில்லாலை) சீ. சகாயநாதன் (மூளாய்) மூ. யோகேந்திரன் (வேலணை கிழக்கு) இ. காசிலிங்கம் (திருக்கோணமலை) செ. பாலசுப்பிரமணியம் (தாவடி) தெ. சந்திரகுமார் (குரும்பசிட்டி) பி. தங்கையா (கரவெட்டி) பி. ஜெயராமன் (றோபேரியா) சி. ஞானசேகரம் (குருநகர்) பொ. நவரெத்தினராசா (காரைநகர்) கு. நிலோமி (தையிட்டி) அ. சுப்பிரமணியம் (அஞ்சல் திணைக்களம்)

(4ஆம் பக்கம் பார்க்க)

காவிரி நீர்ப் பிரச்சினையால்

# கர்நாடக மாநிலத்திலும் இல. தமிழர்களுக்குவேதனை

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்திய குடியுரிமை பெற்று, தாயகம் திரும்பி, நீலகிரி மலைத் தோட்டப் பகுதிகளில் குறிப்பாக, ஊட்டியில் இருந்து மைசூர் செல்லும் வழியிலுள்ள கூடலூர்ப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட தமிழ்த்தொழிலாளர்கள் தான் கர்நாடக மாநிலத்தில் தமிழர்-கன்னடர் மோதல் மோசமடைய காரணம் என்று வலுவான கருத்து பரவியுள்ளது.

இலங்கையில் இருந்து திரும்பியவர்களுக்காக தமிழக அரசு உருவாக்கியுள்ள ''டான் டீ'' தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களாகவுள்ள தாயகம் திரும்பியவர்கள் அத்தோட்டங்களில் சிறுபான்மையினராக வேலை செய்த கன்னடர்களை அடித்துத் துரத்தியதாகவும், அவர்கள் மைசூர் பகுதிக்குச் சென்ற பிறகு தான் கலவரம் தீவிரமடைந்தது என்றும் கூறப்படுகிறது.

இரகசிய பொலிசார் கூட தமிழக அரசிற்கு கொடுத்துள்ள அறிக்கையில் இதனை ஊர்ஜிதம் செய்துள்ளனர். அந்த அறிக்கையில் தமிழ்த் தொழிலாளர்கள் மத்தியில் புலிகளின் ஊடுருவல் அதிகமாக உள்ளதென்றும், புலிகளுக்கு ஆதரவாக உள்ள தமிழ்த் தொழிலாளர்கள் கன்னட மக்களை தாக்கியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தமிழர்கள் தாக்கியதாக கூறப்பட்டு மைசூர் சென்றவர்கள் 300பேர் மட்டுமே என்றும் அவர்களில் 300 பேர் தமிழகத்திற்கு திரும்பி விட்டதாகவும் புள்ளிவிபர அறிக்கையில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கூடலூரில் கன்னடர்கள் தாக்கப்பட்டனர் என்ற செய்தி பரவிய பின்னர் தான் தமிழக - கர்நாடக எல்லையோர கிராமங்களான தாளவாடி, குண்டல் பேட், அம்ச வாடி, நொக்கனூர், திருக்காணம்பி, அருக்கல்வாடி, இலந்தூர், மரவநள்ளி, மங்கலம், போகபுரா, கூடலூர் ஆகிய இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டு தமிழ் மக்கள் தமிழகத்திற்கு வரத் தொடங்கினர்.

காவிரி நதி எங்கு உருவாகி எங்கு செல்கிறது அதனால் என்ன பயன் என்று கூட தெரியாத கூலித்தொழிலாளர்கள் ரோடு வேலை செய்பவர்கள், சிறு தொழில்கள், டீ கடை, இட்லி கடை, தவணை முறையில் துணிகளைக்கொடுத்து வசூல் செய்து பிழைக்கும் மக்கள் நடுத்தர மக்கள் ஆகியோர் மீது தான் கன்னட வெறியர்கள் தாக்குதல் பாய்ந்துள்ளது.

இவர்கள் தமிழர்களின் வீடுகளுக்குச் சென்று ''உங்களுக்கு குடிப்பதற்கு குழாய்த் தண்ணீர்கொடுத்தால், அணைகளைக் கட்டிக் கொண்டு ஆற்றிலா தண்ணீர் கேட்கிறீர்கள்?'' என்று கொச்சைத்தனமாகவும், வெறித்தனமாகவும் திட்டியுள்ளனர். மேலும் ''நாங்கள் மறுமுறை சந்திக்கும் போது இந்த இடத்தில் உங்களைப் பார்த்தோம் என்றால் உங்கள் உடல் பிணவறைக்குக்கூட செல்லாது. பாசறைக்குத் தான் செல்லும்'' என எச்சரித்துச் செல்கின்றனர்.

இதைக் கேட்ட அப்பாவித் தமிழர்கள் உடனடியாக தங்கள் உடைமைகளை அருகிலுள்ளவர்களிடம் தாரை வார்த்து விட்டு கைப்பை, சூட்கேசுடன் 'தாயகம் திரும்ப' பஸ் நிறுத்தம் நோக்கி வந்தால், பஸ் இல்லை. என்ன செய்வது என புலம்பிக் கொண்டிருக்கையில் சில சமூக விரோத கும்பல்கள் இவர்களைத் தாக்கி கையில் உள்ள பொருட்களை சூறையாடுகின்றன. இவ்வளவு கொடுமைகளை அனுபவித்த அவர்கள் ஐந்து ரூபாய் கட்டணம் உள்ள தூரத்திற்கு 50 ரூபா கொடுத்து தமிழகத்தின் எல்லையை அடைந்தனர்.

கலவரத்தில் ஊருக்கு இருபத்தைந்து சமூக விரோதிகள் ஈடுபடுகின்றனர்.

### கன்னட நடிகரின் பங்கு

இதற்கிடையில் தமிழக எல்லைப்பகுதியில் நடந்த கலவரங்களுக்கு கன்னட நடிகர் ராஜ்குமார் ஆட்கள் தான் காரணம் என்றும், தப்பி வந்த தமிழர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெங்களூர், மைசூரில் தமிழர் மீது தாக்குதல் துவங்கியதும் ராஜ்குமார் அங்கிருந்து தாளவாடி (தமிழகம் - கர்நாடக எல்லையில் உள்ள கிராமம்) வந்து விட்டாராம். அங்குள்ள அவருக்குச் சொந்தமான தோட்டத்தில் ஒரு வாரகாலம் தங்கியிருந்து தாக்குதலை நடத்தியதாகவும் அப்போது அவரை கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக்கலவரங்கள் எதையுமே கண்டு கொள்ளாத கர்நாடக பொலிசார் புன்னகை கொள்கின்றனர். தமிழர்கள் யாராவது பொலிசாரிடம் முறையிட்டால் அவர்கள் கூறுவது ''ரயில்வே ஸ்டேஷன் செல்லுங்கள் ரயில் தமிழகம் செல்கிறது'' என்று தான்.

தொகுப்பு - வீரகேசரி


க. பொ. த. சாதாரண தரம்

(ஆண்டு 11)

- பகல் முழுநேர வகுப்புகள்
- சனி, ஞாயிறு வகுப்புகள்
- மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்

25-1-92 சனி காலை 7-45 மணி

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இதைவிடத் தெரிவு .......

வேறேதும் இல்லை! (சி/3821)



புதிய பிரிவு

கணக்கியல்

திரு. S. K. பிரபாகரன்

A/L 93 செவ்வாய் - வியாழன் 3 - 4

A/L 92 செவ்வாய் - வியாழன் 4 - 5

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(சி 3820)


## மரண அறிவித்தல்

### திரு. சிவசம்பு - இராசையா.

காரைநகரைச் சேர்ந்த சந்தம் புளியடியைச் சேர்ந்தவரும் தண்ணீரூற்று லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய திரு. சிவசம்பு - இராசையா 17-1-1992 அன்று பழம்பாசி நெடுங்கேணியில் காலமானார். அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலம் சென்ற கணேசலிங்கம், சண்முகலிங்கம் (பிரான்ஸ்) அமுதலிங்கம் (சுவிஸ்), சத்தியலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும் சிவபாலன் (கணக்காளர் கொழும்பு) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 18-01-1992 அன்று பழம்பாசி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;

(சி/3824) இ. சத்தியலிங்கம் (மகன்)


வெளிவந்து விட்டது!

''முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம்''

ஆக்கியோன்:-

திரு. ந. தேவராஜன் ஜெயராமன்

B. Com. (Hons.) MBA

விலை ரூபா 80/-

முதன் முதல்

தமிழில் வெளிவரும் நூல்



New Master Institute

JAFFNA

AL 92

நாளை ஆரம்பம்

விலங்குச் சூழலியல்

ANIMAL ECOLOGY


## பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரி விரிவுரைகள்

## அரசாங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் நிர்வாகத்திற்குட்பட்ட பிராந்தியத்தில் ஆண் பெண் பரிசாரகர் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தகுதியுடைய திணைக்கள ஊழியர்களுக்கு 02.02.1992 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பின்வரும் பாடங்களில் பரீட்சை நடைபெறும்:

(சி/3820)

...இயதாக கூறப்பட்டு மைசூர் சென்றவர்கள் 500பேர் மட்டுமே என்றும் அவர்...

...றால் உங்கள் உடல் பிணவறைக்குக்கூட செல்லாது. பாசறைக்குத் தான் செல்லும்'' என எச்சரித்துச் செல்கின்றனர்.

இதைக் கேட்ட அப்பாவித் தமிழர்கள் உடனடியாக தங்கள் உடைமைகளை அருகிலுள்ளவர்களிடம் தாரைவார்த்து விட்டு கைப்பை, சூட்கேசுடன் 'தாயகம் திரும்ப...

இந்தக்கலவரங்கள் எதையுமே கண்டு கொள்ளாத கர்நாடக பொலிசார் புன்னகை கொள்கின்றனர். தமிழர்கள் யாராவது பொலிசாரிடம் முறையிட்டால் அவர்கள் கூறுவது ''ரயில்வே ஸ்டேஷன் செல்லுங்கள் ரயில் தமிழகம் செல்கிறது'' என்று தான்.

தொகுப்பு - வீரகேசரி

...கிறோம்.

தகவல்;

(சி/3824) இ. சத்தியலிங்கம் (மகன்)


# வெளிவந்து விட்டது!

''முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம்''

ஆக்கியோன்:-

திரு. ந. தேவராஜன் ஜெயராமன்

B. Com. (Hons.) MBA

விலை ரூபா 80/-

முதன் முதல் தமிழில் வெளிவரும் நூல்

வெளியீடு:

பட்டப்படிப்புகள் கல்லூரி

148 1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி மாணவர்களுக்கும், தொழில் நுட்பக் கல்லூரி, திறந்தவெளிப்பல்கலைக்கழக மாணவர்களுக்கும், நிறுவன முகாமையாளர்களுக்கும் பயன்தரக்கூடிய நூல். (சி/3819)

# New Master Institute

JAFFNA

A L 92

நாளை ஆரம்பம்

விலங்குச் சூழலியல்

ANIMAL ECOLOGY

23.01.92 வியாழன் பி. ப. 3.00 மணி

ஆசிரியர்

திரு. S. P. நாகநாதன்

(சி-3823)

# பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரி விரிவுரைகள்

G. A. Q.

மீட்டல் விரிவுரை

பாடம்:- அரசியல் விஞ்ஞானம்

எமது கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் அவர்களால் ஒருமாதகாலம் தொடர்ந்து நடாத்தப்படும்.

ஆரம்பம்

22-01-1992 புதன்கிழமை பி. ப. 3 00 மணி

விபரங்களுக்கு

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி, 3818)

# அரசாங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் நிர்வாகத்திற்குட்பட்ட பிராந்தியத்தில் ஆண் பெண் பரிசாரகர் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தகுதியுடைய திணைக்கள ஊழியர்களுக்கு 02.02.1992 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பின்வரும் பாடங்களில் பரீட்சை நடைபெறும்:

தமிழ் மொழி 1½ மணித்தியாலம்

பொது சுகாதாரம் 1 மணித்தியாலம்

சம்பந்தப்பட்டோர் பரீட்சைக்குத் தோற்றுமாறும், அவர்களின் நிறுவனத் தலைவர்கள் அவர்களை பரீட்சைக்குத் தோற்ற விடுவிக்குமாறும் வேண்டப்படுகிறார்கள்.

டாக்டர் ந. கனகசபை,

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,

யாழ்ப்பாணம்.

(சி/3826)

# கம்பியூட்டர் கல்வி

- BASIC
- dBASE III+
- LOTUS 1-2-3
- WORD STAR 2000+

புதியபிரிவுகள் ஆரம்பம் 25-01-1992 [சனி, ஞாயிறு] 27-01-1992 (திங், புத, வெ)

வடமராட்சியில் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன


குறிப்பு:-
1] O L படித்த இருபாலாரும் சேரலாம்.
2] தமிழிலும் விளக்கங்கள் அளிக்கப்படும்.
3] செய்முறைப்பயிற்சிகள் யாவும் ஜெனரேட்டர் உதவியுடன் வழங்கப்படும்.
4] பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
5] வட தமிழீழத்திலே கம்பியூட்டர் கல்வியில் முன்னணியில் நிற்கும் ஒரே நிறுவனம்

தொடர்பு:-

வடமராட்சியில்....

யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,

சதா பொண்ஸ் அல்வாய் கிழக்கு, அல்வாய்.



யாழ். நகரில்....

யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,

37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3825)

சகல விதமான அச்சு வேலைகள்,
சகல விதமான அச்சுத் தாள்களில்
சகல வர்ணங்களிலும் செய்துகொள்ள
நாடுங்கள்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, (வைமன் வீதி)
யாழ்ப்பாணம்.

★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ இரவு 10 மணிவரை அச்சுவேலைகள் ஏற்கப்படும்.


# நினைவு கூருகின்றோம்

1992 - 01 - 22

1989 ஆம் ஆண்டு ஆனையிறவில் இந்தியப் படையினர் மற்றும் தேச விரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

தங்கராசா [ஆறுமுகம் அருமைநாயகம் - முரசுமோட்டை, பரந்தன்]

மட்டக்களப்பு கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

தவராசா

1990 ஆம் ஆண்டு தம்பலகமத்தில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

கப்டன் தயான் [தியாகராஜா கதிர்காமத்தம்பி - ஆலங்கேணி]

இதே ஆண்டு வீரச்சாவெய்திய

நியூட்டன் [கந்தையா பூபாலசிங்கம் - செட்டிகுளம்]

சின்னக்காந்தி

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/3822)

### சிந்தனைக்கு

சொல்லுக்கு ஒப்பச் செயலையும்,
செயலுக்கு ஒப்பச் சொல்லையும்
இணங்கச் செய்ய வேண்டும்.

— வில்லியம் ஷேஸ்க்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 22-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# பௌத்தர்கள் வாழலாம்; பௌத்தம் வாழுகிறதா?

வடபகுதியில் பெரும் தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்தினருக்கு ஊக்கமும், ஆசியும் வழங்குவதற்காக கடந்த சனிக்கிழமை பௌத்த குருமார்களின் குழுவொன்று வடபகுதி இராணுவ முகாங்களுக்கு விஜயம் செய்துள்ளது. மல்வத்த பீட மகாநாயக்க தேரோ வண. ரம்புக்வெல விபாஸி தலைமையில் வடபகுதி வந்த இக் குழுவினர் பலாலி, காரைநகர், நயினாதீவு முகாங்களுக்குச் சென்று படையினருக்கு ஆசி வழங்கியதோடு, இராணுவத்தினரின் காவல் அரண்களையும் பார்வையிட்டனர்.

பௌத்த பிக்குகளின் போருக்கான ஆசீர்வாதமும், ஆக்கிரமிப்பிற்கான தூண்டுதலும், சிறிலங்காவில் பௌத்த அமைப்புக்கள் கொண்டுள்ள பேரினவாதச் சித்தாந்தத்தை வெளிப்படுத்தும் அம்சங்களாகும். இது பௌத்தத்தின் பேரால் பௌத்த கோட்பாடுகளுக்கு எதிராக பௌத்த சங்கத்தவர்களும், சிறிலங்கா அரசாங்கமும் இணைந்து மேற்கொள்ளும் அழிவு நடவடிக்கையாகும்.

அரச வம்சத்தில் ஆட்சியுரிமைக்கு வாரிசாகப் பிறந்த கௌதம புத்தர் இரவோடு இரவாக தமது பதவிகளையும், அரச அணிகலன்களையும் துறந்து அரண்மனையைவிட்டு வெளியேறினார். ஆனால் அவர் வழியில் செல்வதாகக் கூறும் சிறிலங்கா பௌத்த பிக்குகளோ அதிகாரம் செலுத்துவதற்காக ஆக்கிரமிப்பு ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டு போரையும் இன மோதல்களையும் தூண்டி விடுபவர்களாக உள்ளனர் அதற்கு நீண்டதூரம் பயணம் செய்து ஆசியும் வழங்கி வருகின்றனர்.

கலிங்கத்துப் போரில் அசோகச் சக்கரவர்த்தி வெற்றி கொண்ட பின்னரே அவர் பௌத்தனாக மாறினார். பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்றும், காயப்படுத்தியும் வெற்றி அடையும் போரினால் நீ எதைச் சாதிக்கப் போகின்றாய் என ஒரு புத்த பிக்கு எழுப்பிய கேள்வியைத் தொடர்ந்தே அவன் பௌத்த சமயத்தைத் தழுவியதாகவும் பெரும் பௌத்த சாம்ராஜ்யத்தை நிறுவியதாகவும் சொல்லப்படுகின்றது. அவன் காலத்திலேயே உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பௌத்தம் பரப்பப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இலங்கையிலும் அசோகச் சக்கரவர்த்தி காலத்திலேயே பௌத்தம் பரவியதாக தெரிவிக்கின்றனர்.

ஆனால் தற்பொழுது பௌத்தத்தின் காவலர்களாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் சிறிலங்காப் பிக்குகள் யுத்த களத்தில் நின்று எதிரியைக் கொல்லு

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

**அன்ரன் பாலசிங்கம்**

26 - 09 - 1991 இல் திரு. தொண்டமான் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராசாவுக்கு பதில் கடிதம்எழுதியிருந்தார். தனது யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் பதிலளிப்பது அவசியமென்றும் அப்பொழுதுதான் இரு தரப்பினருக்கும் ஒத்திசைவான ஒரு தீர்வுத் திட்டத்தை வகுக்கலாம் என்றும் இக் கடிதத்தில் திரு. தொண்டமான் வலியுறுத்தியிருந்தார்.

''ஒரு சிக்கலான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குகருத்துக்கள் மட்டுமல்ல அணுகு முறைகளும் அத்தியாவசியம். நாம் யதார்த்தமான முறையில் செயற்பட வேண்டும் எமது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உங்களுக்கு சமர்ப்பித்த கருத்துக்கள் பற்றி நீங்கள் அளிக்கும் விமர்சனங்களும் அபிப்பிராயங்களும் இரு சார்பினரின் கருத்துக்களும் இணைந்ததோர் திட்டத்தை உருவாக்க ஏதுவாக இருக்கும். அத்தோடு எமது சந்திப்பிற்கும் வழி வகுக்கும். இந்த அடிப்படையில் எமது சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல உங்கள் ஒத்துழைப்பை நாடுகிறேன்'' என்று திரு. தொண்டமான் குறிப்பிட்டிருந்தார்.

விடுதலைப்புலிகளை சந்தித்துப் பேசுவது என்றால் அது உலகத்தின் கவனத்தை ஈர்க்கும். அத்தோடு உள்நாட்டில் பெரும் சர்ச்சையையும் ஏற்படுத்தும் என்பதை திரு. தொண்டமான் உணராமல் இல்லை. சிங்களப் பேரினவாத சக்திகள் சும்மா இராது என்பதும் அவருக்கு தெரியும். அதனை தனது கடிதத்தில் நாசுக்காக சுட்டிக்காட்டவும் அவர் தவறவில்லை.

''எத்தகைய சூழ்நிலையில் நாம் செயற்படுகிறோம் என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். ஈழத்தமிழரின் பிரச்சினை உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. எனவே எமது சந்திப்பு சர்வதேச ரீதியில் விமர்ச

பிறப்பிக்க வேண்டும். இந்தக் கருத்துக்களை வலியுறுத்தி திரு. மகேந்திரராசா அமைச்சர் தொண்டமானுக்கு 30-10-1991ல் ஒரு விரிவான கடிதம் எழுதினார்.

''சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு நாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. எனினும் சமாதானப் பேச்சுகளுக்கு முன்னோடியாக ஓர் அமைதியான, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படுவதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறோம். ஆயினும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஒரு நல்லெண்ண சூழ்நிலைக்கு ஒத்திசைவானதாக அமையவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இரு முனைகளில் சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பாரிய அழுத்தத்தைப் பிரயோகித்து வருகிறது. ஒரு புறம், தமிழ் மண்ணில் இராணுவ விரிவாக்கத்தை நடத்திக் கொண்டு. மறு புறம் பொருளாதார நெருக்குதலையும் தீவிரப் படுத்தி எமது மக்கள் மீது தாங்கொணாத் துன்பப் பழுவைச் சுமத்தி வருகிறது. இவ்விதமான இராணுவப் பொருளாதார நெருக்குதல் நிலை சமாதான அணுகுமுறைக்கு பாதகமாகவே அமையும். ஏனென்றால் இந்த நெருக்குதல் நிலை தமிழர் மீதானஓர் அழுத்மாகத் திணிக்கப்படுவதால் இச்சூழலில் சமத்துவமான சுதந்திரமான பேச்சுக்கள் நிகழ்வது கடி

## ஒற்றையாட்சியும் சுயாட்சியும்

சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் சட்டவாக்க வடிவமான இன்றைய ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது. முற்று முழுதாக சிங்களப் பெரும்பான்மை மக்களின் தேசிய, பண்பாட்டு நலன்களைப் பேணுவது மாத்திரமின்றி பிரதேச ஒரு

**2**

மைப்பாடு என்ற கோட்பாட்டின் கீழ் முழு இலங்கைத் தீவையும் சிங்களவரின் தாயகமாகக் கொள்ளும் இந்த இறுக்கமான யாப்பமைப்பு தமிழரின் நில உடைமைப்பாட்டையும் தேசியத்தனித்துவத்தையும் மறுக்கிறது. தமிழ் மக்களின் இறைமையையும் தன்னாட்சி உரிமையையும் மறுக்கிறது. அரச ஆட்சியதிகாரம் முழுவதும் ஜனாதிபதியிடமும் பெரும்பான்மையினர் ஆட்சி செலுத்தும் பாராளுமன்றத்திலும் ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கிறது இப்படியான ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் உருப்படியான ஒரு மாநில சுயாட்சி அமைப்பை கட்டியெழுப்ப முடியாது தமிழருக்கு 'சுயாட்சி அரசு' என்ற கோட்பாட்டின் கீழ் இந்திய அரசு திட்டமிட்டுக் கொடுத்த மாகாண சபை நிர்வாகமும் அதிகார வறுமையால் செயலிழந்து போனது இதற்கு ஒரு நல்ல உதாரணம். இந்த அடிப்படையில் திரு. தொண்டமான் சமர்ப்பித்த யோசனைகளை திரு. மகேந்திரராசா தனது பதில் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டுகிறார்-

''உங்களது யோசனைகள் தமிழர் பிரச்சினை

யாப்பு திருத்தத்தால் சட்டவாக்கம் பெற்ற பழைய மாகாணசபைத் திட்ட வரையறைக்குள் இந்த யோசனைகள் உட்படுத்தப்பட்டது போலத் தெரிகிறது:

மாகாணசபைத் திட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை எல்லாம் இங்கு பிட்டுக் காட்டுவது அவசியமல்ல. இது நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வி கண்ட ஒரு தீர்வுத் திட்டம் என்பதும் உங்களுக்கு தெரியாதல்ல.சிங்களப் பெரும்பான்மையினரின் அபிலாசைகளை மட்டும்பேணிப் பாதுகாக்கும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழ் மத்திய அரசிடம் அனைத்து ஆட்சியதிகாரங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கும் போது, பிரதேச ரீதியில் உருப்படியான சுயாட்சித் திட்டம் எதையும் உருவாக்குவது சாத்தியமல்ல என்பதே எமது கருத்து. நீண்டகால வரலாற்று அனுபவம் இந்த அரசியல் உண்மையை எடுத்தியம்புகிறது. இந்தியத் தலையீடும் இந்த வரலாற்று அனுபவத்தையே கற்றுக் கொண்டது''.

## தமிழர் பிரச்சினை தேசிய பிரச்சினை

தமிழீழ மக்களின் பிரச்சினை ஒரு சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினை என்ற வகையில் சிறிலங்கா அரசு கொடுத்து வரும் வியாக்கியானத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கவில்லை இலங்கைத் தீவில் பல மொழிகள், பலமதங்கள், பலபண்பாடுகள் கொண்ட பல இனக்குழுக்கள் வாழ்ந்து வருகிறார்கள் எனக் கூறும் பல்லினக் கோட்பாட்டை முன்வைத்து தமிழரின் தாயகத்தையும், தேசிய தனித்துவத்தையும் மூடி மறைக்க முற்

என்ற கருத்தையும் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் இக் கடிதத்தில் வலியுறுத்தினார்.

''தமிழீழ மக்களின் தேசிய அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டு, அவர்களது தேசிய அபிலாசைகள் பூர்த்தியாகும் வகையில் ஒரு தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட்டால் நாம்அதனைப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம்.இந்தக் கருத்தை நாம்பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறோம் இப்படியான ஒருநியாயமான நாகரிகஉலகம்ஏற்றுக்கொள்களும் முற்போக்கான தீர்வுத் திட்டங்களைசிங்கள அரசியல்வாதிகள் சாதகமாக கருத்தில் எடுத்துக் கொள்வார்களா என்பதும் சந்தேகமே''

புலிகள் இயக்கத்திற்கு இப்படியான ஒரு சந்தேகம் எழுவதில் நியாயம் இருக்கத்தான் செய்தது. ஏனென்றால் சிங்களப் பேரினவாதத்தின் நீண்ட, கசப்பான வரலாற்றை எமது இயக்கம் நன்கு அறியும். அத்தோடு. தனது திட்டம் அரசாங்கசார்பற்றது என்றும், தனது தொழிற் சங்கத்தின் சிந்தனைக் குழந்தை என்றும் திரு.தொண்டமான் வலியுறுத்தியுள்ளார். அரசாங்கத்தினதும், சிங்கள எதிர்க்கட்சிகளதும் ஒப்புதல் இல்லாது போனால் இந்த சமரச முயற்சியில் அர்த்தம் இராது. அப்படி நிகழும் பேச்சுக்கள் விடுதலைப் புலிகளுக்கும் திரு. தொண்டமானின் தொழிற் சங்கத்திற்கும் மத்தியில் நிகழும் பேச்சுக்களாகவே அமையும் ஆகவே திரு. தொண்டமானின் யோசனைகளுக்கு தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் ஆதரவு முதலில் திரட்டப்பட வேண்டும். இதனை வலியுறுத்தி, திரு. மகேந்திரராசா தனது கடிதத்தில்;

இலங்கைத் தொழிலாளர் சார்பில் நீங்கள் சமர்ப்பித்த கருத்துக்களில் முற்போக்கான, வரவேற்கத்தக்க அம்சங்கள் அடங்கியுள்ளன. இவை பற்றிஎமது முழுமையான விமர்சனத்தை தெரிந்து

...இன மோதல்களையும் தூண்டி விடுபவர்களாக உள்ளனர் அதற்கு நீண்டதூரம் பயணம் செய்து ஆசியும் வழங்கி வருகின்றனர்.

கலிங்கத்துப் போரில் அசோகச் சக்கரவர்த்தி வெற்றி கொண்ட பின்னரே அவர் பௌத்தனாக மாறினார். பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்றும், காயப்படுத்தியும் வெற்றி அடையும் போரினால் நீ எதைச் சாதிக்கப் போகின்றாய் என ஒரு புத்த பிக்கு எழுப்பிய கேள்வியைத் தொடர்ந்தே அவன் பௌத்த சமயத்தைத் தழுவியதாகவும் பெரும் பௌத்த சாம்ராஜ்யத்தை நிறுவியதாகவும் சொல்லப்படுகின்றது. அவன் காலத்திலேயே உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பௌத்தம் பரப்பப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இலங்கையிலும் அசோகச் சக்கரவர்த்தி காலத்திலேயே பௌத்தம் பரவியதாக தெரிவிக்கின்றனர்.

ஆனால் தற்பொழுது பௌத்தத்தின் காவலர்களாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் சிறிலங்காப் பிக்குகள் யுத்த களத்தில் நின்று எதிரியைக் கொல்லுமாறும், காயப்படுத்தித் துன்புறுத்துமாறும் ஆசீர்வதிக்கின்றனர். ஆக்கிரமிக்குமாறு இராணுவத்தினரைத் தூண்டுகின்றார்கள். கொல்லாமை என்பதையே தீவிரமாகப் போதிக்கும் பௌத்தத்திற்கு இத்தகைய காவலர்கள் சிறிலங்காவில்!

இலங்கைக்கு கௌதம புத்தர் மூன்று முறை வந்தார் எனவும் அதில் ஒருதடவை இயக்கர்களுக்கும் நாகர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைச் சீர் செய்வதற்காக வந்தார் எனவும் மகாவம்சம் தெரிவிக்கின்றது. ஆனால் தற்பொழுது அவர் வழியைப் பின்பற்றுவதாகக் கூறும் பிக்குகளும், பௌத்தர்களும் வடக்கிற்கும் கிழக்கிற்கும் மேற்கொள்ளும் விஜயங்கள் சண்டைகளை தொடங்குவதற்கான ஆசி வழங்குவதற்கும் சண்டையில் கொல்லப்பட்ட இராணுவத்தினருக்கு சமயக் கிரியைகளையும் மேற்கொள்வதற்குமாகவே உள்ளன.

மறுவளமாக இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு ஒன்றைக்காண வேண்டும், யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியமைக்காக அமைச்சர் தொண்டமானை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என பௌத்த பிக்குகள், அவர்களது சங்கங்கள் கோருகின்றன. திரி நிக்காயா போன்ற சங்கங்கள் திரு. தொண்டமானை பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்தே நீக்கவேண்டும் எனக் கோருகின்றன. சமாதானமும், கொல்லாமையும் சிறிலங்கா பௌத்தர்களுக்கு வேப்பம் காயாகியுள்ளன.

இந் நிலையில் சிறிலங்காவில் பௌத்தம் எங்கே போகிறது? பௌத்தம் போதிக்கும் கொல்லாமை என்பதே கொல்லப்பட்டு விட்டதா? சிறிலங்காவில் பௌத்தர்கள் வாழலாம். பௌத்தம் வாழுகிறதா?

## அணுஆயுத பரவல் தடைஒப்பந்தத்தில்

# கைச்சாத்திடுவதில்லை; இந்தியா உறுதியாயுள்ளது

(டோக்கியோ)

அணுவாயுத பரவலைத் தடை செய்யும் ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடுவதில்லை என்பதில் உறுதியாக இருக்கும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டோக்கியோவில் தெரிவித்தார். ஜப்பானிய வெளியுறத்துறை அமைச்சரிடம் இதனைத் தெளிவு படுத்திய இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி, பாகிஸ்தான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதாக குற்றம் சாட்டியதுடன் இந்தியாவிடம் அணு ஆயுதங்கள் எவையுமில்லை எனவும் எடுத்துக் கூறினார்.

...அத்தோடு உள்நாட்டில் பெரும் சர்ச்சையையும் ஏற்படுத்தும் என்பதை திரு. தொண்டமான் உணராமல் இல்லை. சிங்களப் பேரினவாத சக்திகள் சும்மா இராது என்பதும் அவருக்கு தெரியும். அதனை தனது கடிதத்தில் நாசுக்காக சுட்டிக்காட்டவும் அவர் தவறவில்லை.

''எத்தகைய சூழ்நிலையில் நாம் செயற்படுகிறோம் என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். ஈழத்தமிழரின் பிரச்சினை உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. எனவே எமது சந்திப்பு சர்வதேச ரீதியில் விமர்சனங்களை உருவாக்கும். எமது நாட்டில் இன்று உருவாகியுள்ள சூழ்நிலையில் எமது சந்திப்பை பல்வேறு அரசியல்கட்சிகளும் ஒரு நிலையான தீர்வுக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் விமர்சிக்கலாம். அத்தோடு மாறுபட்ட முறையில் செயற்படவும் முனையலாம். எனவே நாம் ஒத்துக் கொள்ளக் கூடிய முக்கிய கருத்துக்கள் அடங்கிய ஒரு திட்டம் எமது பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அத்தியாவசியமாகின்றது''

யாழ்ப்பாணம் வருகைதந்து எம்மை நேரில் சந்தித்து பேச்சுக்களை தொடங்குவதற்கு முன்னர் தாம் தெரிவித்த யோசனைகளுக்கு விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்துகொள்ளுவதில் திரு. தொண்டமான் விடாப்பிடியாக இருக்கிறார் என்பது அவரது கடிதத்திலிருந்து புரிந்தது. எனவே திரு. தொண்டமானுக்கு விபரமாக ஒரு கடிதம் எழுத நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

### சமாதான சூழலும் தடைகள் நீக்கமும்

அரசியல் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முதற்படியாக தமிழர் தாயகத்தில் ஒரு அமைதி சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். இராணுவ, பொருளாதார ரீதியில் இரு பரிமாணங்களில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் அழுத்தங்கள் தளர்த்தப்பட்டு ஒரு இயல்பு நிலை தோற்றப்பட வேண்டும். சிங்கள இனவாதப் பிடியில் சிக்கித் திணறும் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் நெருக்குதலையும் தீவிரப்படுத்தி எமது மக்கள் மீது தாங்கொணாத் துன்பப் பழுவைச் சுமத்தி வருகிறது. இவ்விதமான இராணுவப் பொருளாதார நெருக்குதல் நிலை சமாதான அணுகு முறைக்கு பாதகமாகவே அமையும். ஏனென்றால் இந்த நெருக்குதல் நிலை தமிழர் மீதானஓர் அழுத்தமாகத் திணிக்கப்படுவதால் இச்சூழலில் சமத்துவமான சுதந்திரமான பேச்சுக்கள் நிகழ்வது கடினம்.

தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான, நிரந்தரமான தீர்வைக் காண அரசு தரப்பில் உண்மையான நேர்மையான அக்கறை இருக்குமாயின் இந்தஇராணுவ - பொருளாதார அழுத்த அணுகுமுறைகைவிடப்பட வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைதோற்றுவிக்கும் வகையில் ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். ஒரு சமரச சூழ்நிலையில்தான் சமாதானப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதை நாம் உங்களுக்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. இதற்கு மாறாக, தமிழ் மண்ணில் இராணுவ மேலாதிக்கத்தைத் திணித்து, பொருளாதாரத் தடைகளை இறுக்கி, தமிழ் மக்களை துப்பாக்கி முனையில் நிறுத்தி, தான் வரித்த வரையறைக்குள், தான் விதித்த நிபந்தனைக்குள் பிரச்சினையை தீர்க்கலாமென அரசு சிந்திக்குமானால், அது மாபெரும் அரசியல் தவறாகவே முடியும். இத்தகைய அணுகுமுறையை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை'' எனவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.

ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் உருப்படியான ஒரு மாநில சுயாட்சி அமைப்பை கட்டியெழுப்ப முடியாது தமிழருக்கு 'சுயாட்சி அரசு' என்ற கோட்பாட்டின் கீழ் இந்திய அரசு திட்டமிட்டுக் கொடுத்த மாகாண சபை நிர்வாகமும் அதிகார வறுமையால் செயலிழந்து போனது இதற்கு ஒரு நல்ல உதாரணம். இந்த அடிப்படையில் திரு. தொண்டமான் சமர்ப்பித்த யோசனைகளை திரு. மகேந்திரராசா தனது பதில் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டுகிறார்-

''உங்களது யோசனைகள் தமிழர் பிரச்சினையின் சில அடிப்படை அம்சங்களை [குறிப்பாக, நிலவுரிமை, குடியேற்றம், பாதுகாப்பு, பிரதேச அபிவிருத்தி) தொட்டு நிற்பினும் ஒரு முழுமையான தீர்வுத் திட்ட வடிவமைப்பினைக் கொண்டதாக இல்லை. இந்திய-இலங்கை உடன்பாட்டில் பிரேரிக்கப்பட்டு, பதின்மூன்றாவது அரசியல்...

### தமிழர் பிரச்சினை தேசிய பிரச்சினை

தமிழீழ மக்களின் பிரச்சினை ஒரு சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினை என்ற வகையில் சிறிலங்கா அரசு கொடுத்து வரும் வியாக்கியானத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கவில்லை இலங்கைத் தீவில் பல மொழிகள், பலமதங்கள், பலபண்பாடுகள் கொண்ட பல இனக்குழுக்கள் வாழ்ந்து வருகிறார்கள் எனக் கூறும் பல்லினக் கோட்பாட்டை முன்வைத்து தமிழரின் தாயகத்தையும், தேசிய தனித்துவத்தையும் மூடி மறைக்க முற்படும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் விதண்டாவாதங்களையும் புலிகள் இயக்கம் ஏற்கவில்லை. தமிழீழ மக்களின் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. அவர்களது தாயகமும் தேசியமும் தன்னாட்சி உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்தத் தேசிய அந்தஸ்தின் அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே எமது மக்களின் பிரச்சினை அணுகப்பட வேண்டும். இதன் அடிப்படையிலேயே ஒரு தீர்வுத்திட்டம் நெறிப்படுத்தப்பட வேண்டும்,

...க்களாகவே அமையும் ஆகவே திரு. தொண்டமானின் யோசனைகளுக்கு தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் ஆதரவு முதலில் திரட்டப்பட வேண்டும். இதனை வலியுறுத்தி. திரு. மகேந்திரராசா தனது கடிதத்தில்;

இலங்கைத் தொழிலாளர் சார்பில் நீங்கள் சமர்ப்பித்த கருத்துக்களில் முற்போக்கான, வரவேற்கத்தக்க அம்சங்கள் அடங்கியுள்ளன. இவை பற்றிஎமது முழுமையான விமர்சனத்தை தெரிந்து கொள்வதற்கு முன்னர் இந்தக் கருத்துக்கள் குறித்து ஆளும் கட்சியினதும்எதிர்க்கட்சிகளதும் நிலைப்பாடு எப்படியாக உள்ளதுஎன்பதை நீங்கள் முதலில் அறிந்திருப்பது அவசியம் அல்லவா'' என்று சுட்டிக்காட்டினார்.

(தொடரும்)

# தற்காலிக ஆசிரியர் பதவி; 25 இல் நேர்முகப் பரீட்சை

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் வழங்கப்படவுள்ள தற்காலிக ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதி நடைபெறுமென யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் தெரிவித்தார்.

மேற்படி நேர்முகப் பரீட்சை யாழ். கல்விக் கோட்டத்திற்குட்பட்ட விண்ணப்பகாரிகளுக்கு அதன் கொத்தணி மூலாதாரப்பாடசாலைகளில் அன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பித்த சகலரையும் தத்தமது பகுதிக் கொத்தணி மூலாதாரப் பாடசாலைகளுக்குச் சமூகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

மேற்படி நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் தமது சகல கல்விச் சான்றிதழ்களையும்(பட்டதாரி,வெளிவாரிப்பட்டதாரிப் பரீட்சை சான்றிதழ்கள், தொழில் நுட்பக் கல்லூரிச் சான்றிதழ்கள், க. பொ. த. (உயர் தர), சாதாரண தரப் பரீட்சைசான்றிதழ்கள்), வட இலங்கை சங்கீத சபை சான்றிதழ்கள் மற்றும் 1-11-91 ற்குமுன் பாடசாலைகளில் தற்காலிகமாகக் கற்பித்திருப்பின் அதுபற்றியஆவணங்களையும் ஏனைய விசேட துறைகளில்பெற்ற சான்றிதழ்களையும், அடையாளஅட்டை பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றையும் எடுத்துவரல் வேண்டும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்நேர்முகப் பரீட்சையின் மூலம்தெரிவுசெய்யப்படவுள்ள ஆசிரியர்கள் அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் பாடசாலைகளில் கற்பிப்பதற்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக ஏற்கனவே ஈழநாதம் செய்தி வெளியிட்டமை தெரிந்ததே. (ச)

# ஆயுத உதிரிப்பாகங்கள்

## அமெ. பாகிஸ்தானுக்கு விற்கும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது முப்படைகளுக்கான சாதனங்களின் உதிரிப்பாகங்களை அமெரிக்காவிடம் இருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது என பாகிஸ்தானிய பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

பாகிஸ்தானின் படைத் தலைவர் அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த போது அவரிடம் இதுபற்றி தெரிவிக்கப்பட்டதாகவும் பாகிஸ்தானிய பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

இதேநேரம் பாகிஸ்தானின் எவ்-16 ரக போர்விமான அணிக்கு உதிரிப்பாகங்கள் மிகவும் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

# சகலருக்கும் குடும்ப அட்டை யாழ். செயலகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைவருக்கும் குடும்ப அட்டைகளை வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேற்படி அட்டைகளை வழங்குவதன் மூலம் யாழ் மாவட்டத்திலுள்ளவர்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்ள முடியும் எனவும் குடும்ப விபரங்களை இலகுவாக அறியமுடிவதுடன் கிராம சேவகர்களின் வேலைத் திட்டங்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் செயலக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி அட்டையை ஒவ்வொருவரும் தத்தமது சொந்த பகுதி கிராம சேவகரிடமே பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரியவருகிறது. (ச)

## கல்வி நிர்வாக சேவை தரம் iii பரீட்சைக்கு சென்றோருக்கு விசேட லீவு கிடைக்கும்

கல்வி நிர்வாக சேவை தரம் -3 பரீட்சைக்குக் கடந்த வருடம்கொழும்புக்குச்சென்று பரீட்சை முடிந்த பிறகு ஊரடங்கு காரணமாகத் திரும்ப முடியாத காலப்பகுதிக்கு விசேட லீவு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கையை யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஏற்றுள்ளார். இதற்கானவிண்ணப்பத்தைக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பித்து விசேட லீவை பரீட்சைக்குத் தோற்றியவர்கள் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மின்கலப் பொருள்கள் கொண்டுவருபவர் கைது

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் மின்கலப் பொருள்கள் கொண்டுவர முனையும் பலர் கைது செய்யப்படுகின்றனர்.

நாளாந்தம் சுமார் பதினைந்து பேர் மேற்படி பொருள் கொண்டுவர எடுக்கும் முயற்சியின்போது கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்படுகின்றனர்.

காலில் மின்கலத்தையும் சேர்த்து கட்டிவந்த பலர் கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சோதனை முகாமில் இராணுவத்தினர் அதிக கெடுபிடிகளில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

## பாடசாலைச் சபைகள் இவ்வருடம் நிறுவப்படும்

இந்த வருடம் முதல் சகல பாடசாலைகளிலும் பாடசாலை சபைகள் நிறுவப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

திக்குவெலவில் கூட்டமொன்றில் உரையாற்றிய பிரேமதாசா பாடசாலை சபைகள் நிறுவப்பட்டுஅவை பாடசாலை அபிவிருத்தியில் முக்கிய பங்கு கொள்வதோடு பாடசாலைகளின் குறைநிறைகளையும் உடனுக்குடன் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்ம்என்றும்குதெரிவித்தார்

இந்த நாட்டிலுள்ள தனியார் கல்லூரிகள் இவ்வாறான சபைகளின் மூலமே துரித முன்னேற்றமடைந்தனஎன்றும்

பாடசாலைகளை சூழவுள்ள புத்திஜீவிகளை உள்ளடக்கியதாக இந்த பாடசாலை சபைகள் அமையும் என்றும் பிரேமதாசா தனது உரையில் குறிப்பிட்டார்.


ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் பொருள்கள் பின்வரும் திகதிகளில் ஏலத்தில் விற்கப்படும்.

(1) (2)


## அறிவியல் கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இளவாலை திருக்குடும்ப கன்னியர் பாடசாலை, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில்இன்று மாலை 1.30மணியளவில் அறிவியல் கருத்தரங்குகள் நடைபெற உள்ளது.

''மத்திய கிழக்கில் நடப்பது என்ன'' என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு இளவாலை திருக்குடும்ப பாடசாலையிலும், ''பேணப்படவேண்டிய தமிழர் பண்பாடு'' என்றதலைப்பில் திரு. புதுவை இரத்தினதுரை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும், ''பிரபஞ்சத்தின் அமைப்பு, சூரியக்குடும்பம்'' என்ற தலைப்பில் திரு. ராஜேஸ்வரன் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும் அறிவியல் கருத்துரைகளை வழங்குவார்கள்.

இந்த அறிவியல் கருத்தரங்குகளை விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் ஒழுங்கு செய்துள்ளது.

## மலையகத்தில் தமிழர்கள் தொடர்ந்தும் கைது

(பதுளை)

பதுளை ஸ்பிரிஸ்வெலி, கனவரல்லதோட்டங்களில்மேலும் ஐந்து தமிழர்கள் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பதுளை ஸ்பிரிஸ் வெலியில் மூவரும், பசறை கனவரல்லயில் இருவருமாகசந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்பிரிஸ் வெலியில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் கொழும்பில் வேலை செய்பவர் என்றும், பொங்கல்பண்டிகைக்காக தமது வீட்டுக்குச் சென்றவர்என்றும்தெரியவருகின்றது.

இவ்வாறு சொந்தக் காரணங்களுக்காகசென்றவர்களே கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஓராண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மீது சிறிலங்கா விமானப்படை நடத்திய பாரிய குண்டு வீச்சு தாக்குதலின் ஓராண்டு நிறைவு நாள் இன்றாகும்.

கண்மூடித்தனமாக மூன்று நாட்கள் நடத்தப்பட்ட இக் குண்டுவீச்சுத் தாக்குதல் வல்வெட்டித்துறையை அழித்து விடுவதே நோக்கமாகக் கொண்டிருந்தது

இத்தாக்குதலில் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டதும் பெருமளவு வீடுகள் சேதமானதும் தெரிந்ததே.

## வாவியில்

## வன்செயலால் பாதிக்கப்பட்ட ஆசிரியர் கொடுப்பனவுகள் பெற்றுக்கொடுக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

1983 ஜூலை 23 ஆம் திகதிக்குப் பின்னர் வன்செயல் மற்றும் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இழப்பீடு, ஓய்வூதியம், ஒய்வூதிய நன்கொடைக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவ இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வந்துள்ளது.

இதற்கான விபரங்களைத் திரட்டுவதற்கான கூட்டம் இன்று பி.ப 2 மணிக்கு வடமராட்சிக் கோட்டம் வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், நாளை வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு தென்மராட்சிக் கோட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரீயிலும் நடைபெறவுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அல்லது அவர்களில் தங்கி வாழ்பவர்களை இக் கூட்டத்தில் கலந்துகொண்டு விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு இச் சங்கத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## யுத்தம் முடிந்திருந்தால் பாடசாலை குறை தீர்த்திருக்கலாம் -பிரேமதாசா

வடக்குக் கிழக்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தால் பாடசாலைகளின் சகல குறைகளையும் தீர்த்து வைத்திருக்கலாம் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற இலவச பாடநூல் விநியோக பதினோராவது ஆண்டு விழாவில் உரையாற்றிய போதே பிரேமதாசா இதனைத் தெரிவித்தார்.

மதிய உணவு வழங்கப்பட்டதால் நாட்டின்தேசியஉற்பத்தி அதிகரிக்கப்பட்டது என்றும், தேசிய உற்பத்திகளை கொள்வனவு செய்வதன் மூலம் உயிர் மூச்சு விட்டுக் கொண்டிருந்த கூட்டுறவுக் கடைகள் பயன் அடைந்துள்ளன என்றும், பாடசாலை மாணவர்களின் போசாக்கும் அதிகரித்திருக்கிறது என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

### பஜிரோ சிதறியது

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி சிறிலங்கா இராணுவத்தினரின் பஜிரோ வாகனமொன்று பலத்த சேதமடைந்துள்ளது.

## இன்றைய அரசியல்நிலை; அன்ரன் பாலசிங்கம்உரை

(குருநகர்)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி திரு. அன்ரன் பாலசிங்கம் இன்று (22. 1. 92) மாலை 5 மணிக்கு ''இன்றைய அரசியல் நெருக்கடியும், தமிழீழ விடுதலைப் புலிகளும்'' என்ற தலைப்பிலான கருத்து முன்வைப்பை நிகழ்த்துவார்.

கடற்புலிகளின் வரவேற்புக் குழுவின் ஏற்பாட்டில் குருநகர் புனித கார்மேல் மாதா பொது மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (21)

## புலிகளின் கழுத்தை இறுக பிடித்துள்ளனராம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கழுத்தை நாம் இறுக்கிப் பிடித்து வைத்திருக்கிறோம் எந்த நேரமும் அவர்களை தாக்கி அழிக்கக்கூடிய நிலையில் ஆயுதப்படையினர் உள்ளனர் என்று சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இதனைத் தெரிவித்த அந்த உயர் அதிகாரி விடுதலைப் புலிகளின் இராணுவப்பலம் ஆகக்குறைந்த நிலைக்கு வந்துவிட்டது என்றும், அவர்கள் கயிறுகளுக்குள் சிக்கி நசிங்கி உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## புலிகளின் சுவரொட்டி; கிழித்த படை பலி

விடுதலைப் புலிகளின் சுவரொட்டியை கிழிக்க முயன்ற ... ணுவ முகாமிற்கும், கடற்கரைப் பகுதியிலிருக்கும் இரா...

## பழைய மாணவர் கூட்டம்

யாழ் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10,00 மணிக்கு மேற்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்


யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-01-31 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள்: பகுதி நேரப் போதனாசிரியர்

உதைப்பந்தாட்டம்/ வளைகோற் பந்தாட்டம் (ஹொக்கி)/, கூடைப்பந்தாட்டம் / மேடைவரிப் பந்தாட்டம் (ரேபிள் டெனிஸ்), பூப்பந்தாட்டம் (பட்மின்ரன்)/உடற்பயிற்சி விளையாட்டுக்கள்/தசைகளை வலுப்படுத்தும் உடற்பயிற்சிகள் (ஜிம்னாஸ்ரிக்ஸ்)

கொடுப்பனவு விகிதம்: மணித்தியாலத்திற்கு ரூபா 75-/ [மாதத்திற்கு 900/- உச்ச அளவு)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும்விபரங்களையும் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் உதவிப்பதிவாளர் அலுவல...


## சிறிலங்கா

கப்பட்டுள்ளனர்.

# ஏலவிற்பனை

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் பொருள்கள் பின்வரும் திகதிகளில் ஏலத்தில் விற்கப்படும்.**

| | (1) | (2) |
|---|---|---|
| இடம்: | யாழ். பல்கலைக்கழகம் திருநெல்வேலி. | இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, மருதனார்மடம் |
| திகதி : | 29 - 01 - 92 | 01 - 02 - 92 |
| நேரம் : | காலை 10.00 மணி | காலை 10·00 மணி |

பொருள்கள்

| (1) | | (2) | |
|---|---|---|---|
| வாளி | -01 | தறிக்காத தென்னை மரம் | - 02 |
| கதிரை | - 03 | தறிக்காத வேப்ப மரம் | - 01 |
| மின் சாரக்கேத்தில் | - 05 | தறிக்காதபுளியமரம் | - 01 |
| கண்ணாடி | - 01 | தறிக்காத மாமரம் | - 01 |
| புற்பாய் | - 43 | தறித்த கோணல் புளியமரம் | - 01 |
| அலுவலக | - | பனை ஓலை 32 மரம் (வெட்டி எடுக்கப்படல் வேண்டும்.) | |
| கோவைத் தட்டு | - 01 | | |
| துவிச்சக்கரவண்டி | - 01 | | |
| படப் பிரதி பண்ணும் இயந்திரம் | - 01 | | |
| பூட்டு | - 01 | | |
| தண்ணீர் வடிகட்டி | - 01 | | |
| கணக்குக் கூட்டும் இயந்திரம் | - 09 | | |
| கிளிப்படிக்கும் இயந்திரம் | - 02 | | |
| மணக்கூடு | - 04 | | |
| வாளி | - 02 | | |
| இரும்புப்பெட்டி | - 01 | | |
| பரறாக்கை | - 01 | | |
| மேசை | - 02 | | |
| பற்றுச் சீட்டு இயந்திரம் | - 01 | | |
| பனை ஓலை (வெட்டி எடுக்கப்படல்வேண்டும்) | 6 மரம் | | |
| தறித்த கோணல் புளிய மரம் | - 01 | | |

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருள்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப்பொருள்கள் அனைத்தையும் அன்றுமாலை 4·00 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும். தறிக்கப்படாத மரங்கள், பனை ஓலைகள் மட்டும் ஒரு வாரத்தில் அப்புறப் படுத்தப்படல் வேண்டும்.

மேற்படி பொருள்களை 28ஆம் திகதி மாலை 2·00மணி தொடக்கம் 4·00 மணி வரை திருநெல்வேலியிலும், 30 ஆம் திகதி மாலை 2·00 மணி தொடக்கம் 4·00மணி வரை மருதனாமடத்திலும் பல்கலைக்கழக நிதியாளரை தொடர்பு கொண்டு பார்வையிடலாம்,

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
20-01-92

பதிவாளர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சபைகள் நிறுவப்பட்டுஅவை பாடசாலை அபிவிருத்தியில் முக்கிய பங்கு கொள்வதோடு பாடசாலைகளின் குறைநிறைகளையும் உடனுக்குடன் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்ம்என்றும்கு தெரிவித்தார்

இந்த நாட்டிலுள்ள தனியார் கல்லூரிகள் இவ்வாறான சபைகளின் மூலமே துரித முன்னேற்றமடைந்தன என்றும்

பாடசாலைகளை சூழவுள்ள புத்திஜீவிகளை உள்ளடக்கியதாக இந்த பாடசாலை சபைகள் அமையும் என்றும் பிரேமதாசா தனது உரையில் குறிப்பிட்டார்.

## சிறிலங்கா

கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் பெரும்பாலானோர் ஜே வி. பி. சந்தேக நபர்கள் என்றும், உண்ணாவிரதம் இருந்து வருவோரின் நிலை தொடர்ந்தும் மோசமாக இருந்து வருவதாகவும் பி.பி.ஸி. நேற்றிரவுகூறியது.

## புலிகள்

வெடிப்புச் சம்பவத்துக்கும் புலிகளுக்கும் சம்பந்தமிருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுவதாக வெளிநாட்டு செய்தி ஏஜென்சிகள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து சீனன்குடா விமானத் தளத்தை அண்டியுள்ள காடுகள் மற்றும் வெள்ளை மணல், கிளப்பர் பேர்க் பகுதிகளில் முப்படையினரும் தீவிர தேடுதல் வேட்டையில்ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள்தெரிவிக்கின்றன.

## அடையாள அட்டை

க. மயில்வாகனம் (புலோலி) அ. ராமச்சந்திரன் (வட்டுக்கோட்டை) சி. சின்னத்துரை (பளை வீமன்காமம்) வை.பிரபாகரன்(மண்டைதீவு அ. கமலநாதன் (களுவஞ்சிக்குடி) சூ. செபஸ்தியாம்பிள்ளை (புதுக்குடியிருப்பு) சி.சிவபரன்(குரும்பசிட்டி)க. சுமங்கலி (மூளாய்) சி. தவயோகராசா (கட்டைப்பராய்) க. பஞ்சரத்தினம் (வண்ணார்பண்ணை) க. தருமரத்தினம்(மண்டைதீவு) சி.கணபதிப்பிள்ளை (வற்றாப்பளை) கு. பத்மினி (நல்லூர்) செ பூபாலசிங்கம் (புத்தூர் கிழக்கு) செ. சாள்ஸ்மதிவதனன் (திருகோணமலை) தா மாணிக்கம் (வட்டுக்கோட்டை) ச. குமாரசாமி (உடுவில்) அ. திலகவதி (கொடிகாமம்) கி. சிவகுலநாதன் (குரும்பசிட்டி) க. பத்மநாதன் (புலோலி தெற்கு) வ. வேதநாயகம் (கந்தரோடை) சு. விமலாதேவி (குப்பிளான்) யோ. சேவியர் (கரையூர்) நா. லட்சுமணன் (நாவலர்றோட்)

## ஓராண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மீது சிறிலங்கா விமானப்படை நடத்திய பாரிய குண்டு வீச்சு தாக்குதலின் ஓராண்டு நிறைவு நாள் இன்றாகும்.

கண்மூடித்தனமாக மூன்று நாட்கள் நடத்தப்பட்ட இக் குண்டுவீச்சுத் தாக்குதல் வல்வெட்டித்துறையை அழித்து விடுவதே நோக்கமாகக் கொண்டிருந்தது

இத்தாக்குதலில் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டதும் பெருமளவு வீடுகள் சேதமானதும் தெரிந்ததே.

## வாவியில்

ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம்பொங்கலன்றும் மண்டூர் குருமண்வெளித்துறையில் மண்டூர் கொத்தணி அதிபர் உட்பட மூவர் தோணி புரண்டு மரணமானதும் குறிப்பிடத்தக்கது.

## இராணுவத்

துரைச்சாமி (சித்தாண்டி) துரைச்சாமி ராசா,சின்னையா வின சித்தம்பி, பெரிய தம்பி (வந்தாறுமூலை) ஆகிய தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கிருபை (20வயது) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

மேலும் அரசடித் தீவுப் பகுதியில் திருமீழிஆளையன், ராசலிங்கம் லிங்கன் ஆகிய இருவரும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## வடமராட்சியில்

இவ்விடத்தில் கால்நடைகளும் இறந்து கிடந்தன பல பெரிய மரங்களும் முறிந்து கிடந்தன. 4 ஆம் குறுக்குத்தெருப் பகுதியில் உள்ள திரு. சிவபாதசுந்தரம், திருமதி. தங்கவேலாயுதம், திரு. எஸ். கந்தசாமி, திரு. கே. ரவீந்திரன், திரு. ஆர். ஞானசேகரம், திரு. கே. தியாகராசா, திரு. எஸ். கந்தையா இளைப்பாறிய பொலிஸ் சார்ஜண்ட், திரு. எஸ். வீரசிங்கம், திருமதி. அம்பலவாணர் ஆகியோரின் வீடுகள் சேதமடைந்துள்ளன.

குடத்தனை மணற்காட்டில் அந்தோனியார் கோயிலுக்கு அருகாமையில் வீசப்பட்ட குண்டுகளினால். திருமதி. மரியாம்பிள்ளை மேரிறெஜினா (வயது 55) பலியானார். சில்லாலையைச் சேர்ந்த மாணவியான செல்வி. நிறஞ்சினி (வயது 17) காயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (25,82)

# புலிகளின் கழுத்தை இறுக பிடித்துள்ளனராம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கழுத்தை நாம் இறுக்கிப் பிடித்து வைத்திருக்கிறோம் எந்த நேரமும் அவர்களை தாக்கி அழிக்கக்கூடிய நிலையில் ஆயுதப் படையினர் உள்ளனர் என்று சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இதனைத் தெரிவித்த அந்த உயர் அதிகாரி விடுதலைப் புலிகளின் இராணுவப்பலம் ஆகக்குறைந்த நிலைக்கு வந்துவிட்டது என்றும், அவர்கள் கயிறுகளுக்குள் சிக்கி நசிங்கி உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

# புலிகளின் சுவரொட்டி; கிழித்த படை பலி

விடுதலைப் புலிகளின் சுவரொட்டியை கிழிக்க முயன்ற சிப்பாய் கொல்லப்பட்டார்.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பகுதியில் பத்திரகாளி கோயிலடியில் இருக்கும் சிறிலங்கா இராணுவ முகாமிற்கும், கடற்கரைப் பகுதியிலிருக்கும் இராணுவ முகாமிற்கும் இடையே உள்ள பிள்ளையார் கோவில் மதிலின் மேல் போராளியின் ஓராண்டு நினைவஞ்சலி சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது இச்சுவரொட்டியைக் கிழிக்க முயன்ற இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். கைக்குண்டு வீசியதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் காயமடைந்தனர்.

## குச்சவெளி

குளம்)

★ கப்டன் உதயன் (கண்ணன் ராசேந்திரன் ஹற்றன்)

ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

## புலிகளின்

யேறிய இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தடுத்து தாக்குதல் நடாத்தினர். பதினைந்து நிமிடம் வரையில் நீடித்த இம் மோதலில் இராணுவத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவடைந்தனர்.

## லொறியை

ருந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இவ் லொறியை மீட்க சென்ற இருவரைக் கண்டதும் இராணுவத்தினர் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனராம்.

அதன்பின் அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று முகாம் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தனராம். விபரத்தைக் கேட்டறிந்த அவ் அதிகாரி லொறியை அவர்களிடம் வழங்க மறுத்ததுடன் அந்த லொறியை திருக்கோணமலைக்கு அனுப்பி வைப்பதாகவும் அங்கு சென்று பெற்றுக் கொள்ளுமாறும் கூறினாராம்.

இதன்பின் இவ்விருவரது கண்களும்இறுகக் கட்டப்பட்டு முகாமிற்குள்ளேயே நீராகாரமின்றி தடுத்து வைக்கப்பட்ட பின் மாலை ஆறுமணியளவில் முகாமைவிட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டனராம்.

## க. பொ. த.

தது ஐந்து தவணையாவது கற்றிருக்க வேண்டும். மாணவரின் வரவை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

1991 ஆம் ஆண்டில் ஆரம்பித்த1993ஆம்ஆண்டு க.பொ. த. (உ.த) வகுப்புகளில் சேர்ந்த மாணவர்கள் 1993 ஆம் ஆண்டு க. பொ. த. (உ. த) பரீட்சைக்குத்தகுதியுடையவர்

## பெருமளவு

★ ஜே. ஆர்கைக் குண்டுகள்-3 ஆகியன உட்பட பெருமளவு இராணுவ உபகரணங்களும் அங்கும்.

(ஹொக்கி)/, கூடைப்பந்தாட்டம் / மேடைவரிப் பந்தாட்டம் (ரேபிள் டெனிஸ்), பூப்பந்தாட்டம் (பட்மின்ரன்)/உடற்பயிற்சி விளையாட்டுக்கள்/தசைகளை வலுப்படுத்தும் உடற்பயிற்சிகள் (ஜிம்னாஸ்ரிக்ஸ்)

கொடுப்பனவு விகிதம்: மணித்தியாலத்திற்கு ரூபா 75-/ [மாதத்திற்கு 900/- உச்ச அளவு)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும்விபரங்களையும் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23 X 10 ச. மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-01-21

(சி/3828)

# மரண அறிவித்தல்

## திரு. நா. ஸ்ரீனிவாசக்குருக்கள்

புங்குடுதீவு ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த பெரியபுலம் வீரகத்திவினாயகர் ஆலய பிரதம குரு நா. ஸ்ரீனிவாசக் குருக்கள் கொழும்பில் காலமானார். இவர் ஸ்ரீசாரதாம்பாளின் அன்புக் கணவரும், இரகுநாதக் குருக்கள், நாகேந்திரக் குருக்கள், சண்முகநாதக் குருக்கள், திருஞானசம்பந்த சர்மா, சர்வானந்தசர்மா [கனடா], குகனேஸ்வர சர்மா (கனடா) ஆனந்தசர்மா, [கனடா], பரமேஸ்வரி, கிருஷ்ணலீலா, மீனலோசினி, ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

233/3 கந்தர்மடம்,
நல்லூர். [2131]

தகவல் :
இ. கமலநாத சர்மா